இறந்திட வரினும் அஞ்சான்
இடுக்கண் ஏன்றானும் தம்மால்
மறந்திடும் மனம் தன்னை
மாலவனே வெகுபர் ஆடுஞர்
இறந்திடும் இரண்டு நாளைச்
உடல் வத்தை ஆரம்ப யாவும்
துறந்திடேன் பிறந்த கொள்கை
தூரன் என்னுடைப் பெயர் பெற்றேன்.

★

இன்னுமோர் ஊழி காலம்
இருக்கினும் இறப்ப தல்லால்
பின்னும் இங் கமர்வ தன்றோ
பறந்தவர் இறக்கை இன்மையும்
மின்னலும் வாழ்க்கை வேண்டி
மண்ணவர்க் கிந்த கீந்த
மன்னுயிர் சமைக்கிலேன் யான்
மாயவன் தனையும் வென்றேன்.

★

மைந்தனோ என் தன்
மதகளிறோ வல்லையேல்
சிந்தையோ சிந்தை
தெவிட்டாத தெள்ளமுதோ
தந்தையோ தந்தைக்குத்
தந்தையாய் ஆன் கொண்டனையே
எந்தையோ நின்னை
இற்றோ வளர்த்தனனே.

★

பொன்னை நிகர் தன்னைப்
புதல்வர்களா மங்கையரை
பின்னை யுறு பொருளை
எல்லாம் பெறலாமே
என்னையுடைய
இளையோனே இப்பாரில்
உன்னை இனிப் பெறுவ
தன்றோ உரையாயோ.

★

உற்றதுணை நீ என்
உயிர் நீ உணர்ச்சியும் நீ
சுற்றமும் நீ தாயையும் நீ
என் இனிய தோன்றலும் நீ
நற்றவமும் நீ யென்று
நான் நினைத்தேன் நீ அதனைச்
சற்றும் நினையாமல்
தனித்திருக்கக் கற்றனையோ.

★

வாக்கினில் பெரியர் மாய
வண்மையில் பெரியர் சொல்லம்யாளோ
ஊக்கினில் பெரியர் வெம்போர்
ஊக்கத்தில் பெரியர் எண்ணில்
சீர்த்தியில் பெரியர் சீற்றச்
செய்கையில் பெரியர் தாவும்
காத்தினில் பெரியர் யாரும்
காலனின் பெரியர் அம்மா.

★

காலமாய்க் காலம் இன்றிக்
கருமமாய்க் கருமம் இன்றிக்
கோலமாய்க் கோலம் இன்றிக்
குணங்களாய்க் குணங்கள் இன்றி
ஞாலமாய் ஞாலம் இன்றி
அநாதியாய் நின்ற செல்வம்
வேலமாய் இருந்த வள்ளல்
மேவிடு கருவி கொண்டேன்.

★

எண்கணனைக் கொட்டிய கொட்டு எங்கேனும்
பட்டதோ
மங்கை அரிமேல் அடித்த மந்திரக்கோல் —
எங்கேனும்
பட்டதோ எங்கள் பசுபதிமேல் பட்ட அடி
பட்டதே எவ்வுயிர்க்கும் பட்டு.

[எண்கணன் - எட்டு கண்ணுடைய
பிரமா, அரி - கண்ணன்]

★

கொடுந்தாள் அலவ, குறையாம் இரப்பேம்,
ஒடுங்கா ஒலி கடற் சேர்ப்பன் — நெடுந்தேர்
கடந்த வழியை எம் கண்ணாரக் காண
நடந்து சிதையாதி நீ.

கொடுந்தாள் அலவ - வளைந்த காலு டைய நண்டே; குறையாம் இரப்பேம் — காரியம் ஒன்றை யாசிக்கின்றேன்; ஒடுங்கா ஒலி கடற் சேர்ப்பன் — அவ்வழி ஒழுக்கத்தையுடை கடல் துறைக்கு சேர்ந்த; நெடுந்தேர் — நெடுந்தேர்; நடந்து சிதையாதி — நீ நடந்து அதைச் சிதைக்காதே.

இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான் பெருஞ் செல்வமும் நில்லா
புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்
மிக்க அறமே விழுத்துணை யாவது.
— மணிமேகலை.

★